

கிருஷ்ணகிரியில் நடந்த தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டு இயக்க பெண் விவசாயிகள் சங்க மாநாட்டில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ., பிரகாஷ் எம்.எல்.ஏ., மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் செங்குட்டுவன், முருகன், டேம்.வெங்கடேசன், சீனிவாசன், அன்பரசன், கோவிந்தசாமி, அஸ்லாம், வேலுமணி, தெய்வசிகாமணி மற்றும் விவசாய சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தொடர்ச்சியாக பலவீனமடைந்து வரும்

# ரூபாயின் மதிப்பை உயர்த்த ஏதேனும் திட்டம் உண்டா?

## மக்களவையில் அருண் நேரு கேள்வி!

புதுடெல்லி, டிச. 11-

“தொடர்ச்சியாக பலவீனமடைந்து வரும் ரூபாயின் மதிப்பை உயர்த்த ஏதேனும் திட்டம் உண்டா?” என்று நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் அருண் நேரு கேள்வி எழுப்பினார்.

இது குறித்து அவர் எழுப்பிய கேள்வி வருமாறு:-



கடந்த ஆண்டில் டாலர் கணிசமாக வலுப்பெற்றுள்ளது, அதற்கடுத்து ரூபாயும் தொடர்ச்சியாக பலவீனமடைந்துள்ளது. ரூபாயின் பலவீனத்தை நிர்வகிப்பதற்கும், அதனால் ஏற்படும் பணத்தின் அதிக வெளிச்செல்லலை (OUTGO) நிர்வகிப்பதற்கும், ஏதேனும் திட்டங்கள் உள்ளதா என்று அரசாங்கத்திடம் கேட்டு அறிய விரும்புகி றேன். எனவே, எனது கேள்வி, அந்த சூழ்நிலையை நிர்வகிக்க அரசாங்கத்திடம் இருந்து ஏதேனும் தற்செயல் திட்டங்கள் (CONTINGENCY PLANS) உள்ளதா என்று கேட்பதாகும். என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு பங்கஜ் சௌத்ரி (நிதித்துறை இணை அமைச்சர்): பதில் அளிக்கும் போது:- டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு சந்தை அடிப்படையிலானது என்பதை உங்கள் மூலம் உறுப்பினருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். மேலும் எந்த வரம்பும் நிர்ணயிக்கப்படவில்லை. மேலும், அரசாங்கம் இதில் எந்தவித தலையீட்டையும் செய்வதில்லை. சிறப்பு சூழ்நிலைகளில், ரிசர்வ் வங்கியால் (RBI) டாலரின் விநியோகம் கண்காணிக்கப்படுகிறது என்று கூறினார்.

### நாடு முழுவதும் புதுப்பிக்கத்தக்க

# எரிசக்தி உற்பத்தியைக் கூட்ட - ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் – தருமபுரி ஆ.மணி எம்.பி. கேள்வி!

புதுடெல்லி,டிச.12 -

தருமபுரி எம்.பி.ஆ.மணி மக்களவையில் கேள்வி வருமாறு:

இந்தியா முழுவதும் 2030 ஆம் ஆண்டுக்குள் 500 GW புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனை அடைய ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா? தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் உற்பத்தி திறன் கூட்டலின் தற்போதைய நிலை என்ன?

நாடு முழுவதும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு (RE) கடன் உறுதிமொழிகளை அதிகரிக்க ஒன்றிய அரசு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுடனும்,நிதி நிறுவனங்களுடனும் இணைந்து ஏதேனும் திட்டங்களை வழங்கி உள்ளதா? இருப்பின் அதன் விவரங்கள் என்ன?

பிரதான் மந்திரி சூர்யா கர் முஃப்ட் பிஜிலி யோஜனாவின் கீழ் 7 % வட்டியில் அடமானம் இல்லாத கடன் (PM-SBMGY)



3 KW வரை கூரை சூரிய மின் நிறுவல் உள்ளிட்ட திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் உள்ள குடும்பங்கள் பயன் அடைந்துள்ளதா? இருப்பின் அதன் விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில் தருமபுரி மாவட்டம் உட்பட IREDA, REC,PFC மற்றும் பொதுத்துறை வங்கிகள் மூலம் RE கடன்கள் வழங்கப்பட்டுள்ளதா? வழங்கப்பட்டிருந்தால் அதன் எண்ணிக்கை மற்றும் மதிப்பு என்ன? என்று புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் மின்சாரத்துறை இணையமைச்சர் ஸ்ரீபாத் யோசோ நாயக்கிடம் மக்களவையில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ. மணி கேள்வி எழுப்பி உள்ளார்.

### முத்துப்பேட்டை ஒன்றிய,பேரூர் பகுதிகளில்

# “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” முகவர்கள் கூட்டம்!

## இரா.மனோகரன் - எம்.எஸ்.கார்த்திக் பங்கேற்பு!

திருவாரூர், டிச. 12 -

திருவாரூர் மாவட்டம் முழுவதும் உள்ள ஒன்றிய நகர பேரூர் மற்றும் வார்டு,கிளை கழகங்களில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” முகவர்கள் கூட்டம் கழக தலைவர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களி, மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்எல்ஏ அவர்களின் ஆலோசனைகளின்படியும் நடைபெற்று வருகிறது .

முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” முகவர்கள் கூட்டத்தை வெற்றிகரமாக துவக்கி வைத்ததையடுத்து மாவட்ட கழக செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. ஆலோசனைகளின்படி என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை கூட்டம், திருவாரூர் மாவட்டம் முத்துப் பேட்டை ஒன்றியத்தில் இடும்பாவனம் ஊராட்சியில்நடைபெற்றது.

பாகம் எண் 265ல் பி.எல்.ஏ.2 பொறுப்பாளர் என்.குமரவேல் பரப்புரை கூட்டத்தை தொடங்கி வைத்தார். ஒன்றிய கழக செயலாளர் இரா.மனோகரன் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகி,சார்பு அணி நிர்வாகிகள்,கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்களுடன் வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

முத்துப்பேட்டை பேரூரில் நடைபெற்ற “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பூத் கமிட்டிக்கூட்டதிதிற்கு 235 வது பூத்தில் பேரூர் செயலாளர் எம்.எஸ்.கார்த்திக் தலைமை ஏற்க பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி மும்தாஜ்பேகம் நவாஸ்கான் மற்றும் துணைத்தலைவர் சிவக்குமார் முன்னிலை ஏற்க பி.எல்.ஏ.2 சிவ. அய்யப்பன் வரவேற்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் பேரூர் நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற உறுப்பிர்கள் பாலு , சுல்த்தான் ,நியமன உறுப்பினர் இன்பராஜ் பொருளாளர் காதர்உசேன் மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளர் நீலவேணி, பி.டி.ஏ . பிரபாகரன் மற்றும் பி.எல்.சி., ஐ.டி. விங் நவீன் நகரமகளிரணி நீலக்கன்னி மற்றும் இளைஞரணி காளிதாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் வார்டு செயலாளர் ராபார்ட் நன்றி கூறினார்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி, புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி திருவரங்குளம் கிழக்கு ஒன்றியம் புள்ளான்விடுதி ஊராட்சி கடைவீதி பகுதியில், கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளினை முன்னிட்டு திருவரங்குளம் கிழக்கு ஒன்றிய இளைஞரணி திமுக சார்பில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மரக்கன்றுகள் நடும் விழாவில் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நடவு செய்தார். நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் கே.பி.கே.டி.தங்கமணி, கே.எஸ்.ரவி, குமார் (எ) துரைக்கண்ணு, பேரூர் கழக செயலாளர் கே.சி.சிவக்குமார், மகேஸ்வரி சண்முகநாதன், எம்.ஜி (எ) ராமச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### இதுவரை ரூ.6 கோடியே 37 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

### 2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

### 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 37 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 10-12-2025** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | எஸ்.டில்லிபாபு(முத்தமிழறிஞர் கலைஞர் கார் ஓட்டுநர் சஞ்சீவி மகன்),சென்னை. | – 25,000/– |
| 2. | திருமதி சி.மாணிக்கம், மலையான் தெரு, தென்காசி, தென்காசி மாவட்டம். | – 25,000/– |
| 3. | சி.மணி, எம்.ஜி.ஆர். நகர், கலைஞர் நகர் பகுதி, சென்னை தெற்கு மாவட்டம். | – 25,000/– |
| 4. | ஆர். சங்கர், அழகாபுரி, ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம். | – 25,000/– |
| 5. | திருமதி பாவை சுப்பிரமணியன், சுபேதார் தெரு, கள்ளக்குறிச்சி. | – 25,000/– |
| 6. | அ. சண்முகம், 3வது வார்டு, தொரப்பாடி பேரூர், கடலூர் மாவட்டம். | – 25,000/– |
| 7. | எல். ராஜேந்திரன், சாத்தனூர், பாலக்குடி அஞ்சல், தஞ்சை மாவட்டம். | – 25,000/– |
| 8. | என்.சிவசுப்பிரமணியன், மருதூர்தெற்குசேத்தி கிராமம், வேதாரண்யம், நாகை. | – 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

### ஸ்கிராப்பேஜ் கொள்கையால் லாரி உரிமையாளர்கள் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கும்!

# வணிக வாகன இயந்திர மாற்றத்திற்கு விலக்கு அளிக்க வேண்டும்!

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச. 12 –

டெல்லியில் நாடாளுமன்ற மாநிலங்களவை கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. இக்கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு ஸ்கிராப்பேஜ் கொள்கையால் லாரி உரிமையாளர்கள் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிப்பதால் வணிக வாகன இயந்திர மாற்றத்திற்கு விலக்கு அளிக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து மாநிலங்களவையில் அவர் பேசியது வருமாறு:–

வணிக வாகன ஸ்கிராப்பேஜ் கொள்கை மற்றும் நமது முக்கியமான லாரி துறை மற்றும் தேசிய விநியோகச் சங்கிலியில் அதன் தாக்கம் குறித்து இந்த பூஜ்ஜிய நேரத்தில் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயத்தை எழுப்ப அனுமதித்ததற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்கிராப்பேஜ் கொள்கை மூலம் மாசுபாட்டைக் குறைத்து சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தும் அரசின் குறிக்கோள் நிச்சய மாக சிறந்த பணியாகும். இருப்பினும், வணிக வாகனங்கள், குறிப்பாக 20 ஆண்டுகளுக்கும் மேலான லாரிகள், கட்டாயமாக ஸ்கிராப்பிங் செய்வது, இப்போது எண்ணற்ற லாரி உரிமையாளர்களின் வாழ்வாதாரத்தை கடுமையாகப் பாதித்து வருகிறது.

இந்தியாவின் சரக்கு போக்குவரத்தின் முதுகெலும்பான இந்த லாரிகளில் பாடி திறன் கட்டமைப்பு கொண்டுள்ளன. மாசுபாட்டிற்கான முக்கிய காரணம் பொதுவாக பழைய இயந்திரம் தான். இந்த பழைய மாசுபடுத்தும் இயந்திரத்தை புதிய பாரத் நிலை (BS) இணக்கமான இயந்திரத்துடன் மாற்றுவது ஒரு நடைமுறை மற்றும் செலவு குறைந்த நடைமுறையாகும்.

இந்த ஒற்றை மாற்றம், தொழில்நுட்ப ரீதியாக வாகனத்தை புதுப்பிக்க ‘எஞ்சின் மட்டும் மாற்ற வேண்டியிருக்கும் போது, முழு டிரக் பாடியையும் ‘ஸ்கிராப்’ செய்ய ஏன் கட்டாயப்படுத்த வேண்டும்? இந்தக் கொள்கை சிறிய லாரி உரிமையாளர்களுக்கு பெரும் பொருளாதாரச் சுமையை ஏற்படுத்துகிறது, அவர்களால் புதிய வாகனத்தை பல லட்சக்கணக்கான ரூபாய்க்கு வாங்க முடியாது. இது குறைந்த ஏற்றுமதி திறன் காரணமாக தளவாடச் செலவுகளை அதிகரிக்கவும், இறுதியில் சாதாரண குடி



மகனுக்கு அத்தியாவசியப் பொருட்களின் விலையில் பணவீக்கத்தை ஏற்படுத்தவும் வழிவகுக்கும்.

எனவே, சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் இந்தக் கொள்கையை மறு பரிசீலனை செய்து, 20 ஆண்டுகளுக்கும் மேலான ஒரு லாரி பழைய எஞ்சினை புதிய, சான்றளிக்கப்பட்ட மற்றும் BSVI இணக்கமான எஞ்சினுடன் மாற்றினால், வாகனம் வெற்றிகரமாக ஒரு கடினமான தானியங்கி தகுதி சோதனையில் (ATS) தேர்ச்சி பெற்றால், அதை இயக்க அனுமதிக்க வேண்டும் என்றும் வணிக வாகன இயந்திர மாற்றத்திற்கு விலக்கு அளிக்க வேண்டும் என கோரிக்கை வைக்கிறேன்.

இந்த நடவடிக்கை இயந்திர மாற்றத்தைத் தொடர்ந்து கட்டாய தகுதி சோதனை என்பது நமது பொருளாதார முதுகெலும்பை முடக்காமல் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கான ஒரு நடைமுறையாகவும், மென்மையான வழியாகவும் இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.



கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் கிழக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞரணி சார்பில் மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் பரிசு மற்றும் சான்றிதழை வழங்கினார். உடன் சீர்காழி சட்டப்பேரவை உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, செல்வமணி, மகா.அலெக்சாண்டர், மலர்விழி திருமா வளவன், பஞ்சு.குமார், அமிர்த.விஜயகுமார், ஏ.ஆர்ராஜா, சுப்புராயன், பிசிவதாஸ், எம்.கே.மருது, துர்கா பரமேஸ்வரி, ஜெயப்பிரகாஷ், எஸ்.ஆனந்தன், ஜெ.ஜுபைர், பாலகணேசன் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.